# 1 கடவுள்

சைவசமய வழிபாட்டில் கடவுள் நம்பிக்கை மிகப் பழங்காலந் தொட்டே காணப்பட்டு வருகின்றது. கடவுள் மனம், வாக்கு எல்லாவற்றையும் கடந்த, அதே வேளையில் நம் உள்ளும் இருப்பவர் என்பதால்,'கடவுள்' எனப்படுகின்றார். உயிர்கள் அனைத்திற்கும் மேலானவர் என்பதனால் தான் அவர், 'தலைவன்' என அழைக்கப்படுகின்றார். கடவுள் எல்லாம் வல்லவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; பிறப்பு இறப்பு அற்றவர்; ஆதியும் அந்தமும் இல்லாதவர்; துன்பங்களுக்கு உள்ளாகாதவர் கடவுள் எங்கும் நிறைந்தவர்; எல்லா உயிர்களிலும் கலந்து உள்ளார் என்பதைத் திருவருட்பயன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்**
**நிகரிலிறை நிற்கும் நிறைந்து"**

அகரவுயிர் ஏனைய எல்லா எழுத்தொலிகளிலும் கலந்து நிற்பதைப் போன்று கடவுள் எல்லா உயிர்களிலும் அத்துவிதமாய்க் கலந்துள்ளான் என்பது அதன் பொருளாகும்.

சைவசித்தாந்தம் கடவுளுக்குச் சொரூபநிலை, தடத்தநிலை என இரு நிலைகளைக் குறிப்பிடுகின்றது. சொரூபநிலை என்பது, கடவுள் எல்லாவற்றையும் கடந்த குணங் குறிகள் அற்ற நிலையாகும். தடத்தநிலை என்பது ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டு, ஒருபடி கீழே இறங்கி, உருவம் நாமம் குணங்குறி தொழில்களோடு ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் நிலையாகும்.

கடவுள் ஒருவனே என்பதை இருக்கு வேத வாக்கியம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. **"ஏகம் சத் விப்ரா வஹுதா வதந்தி"** என்பது அந்த வாக்கியமாகும். அதன் பொருள் உண்மைப் பொருள் (சத்) ஒன்றே. ஞானியர் அதனைப் பல பெயர்களால் அழைக்கின்றனர் என்பதாகும். கடவுள் ஒருவனே என்பதை மணிவாசகர் திருவாசகத்தில், **"ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க..."** என்றும் திருவியலூர் உய்யவந்த தேவர்,**"ஏகனுமாகி அனேகனுமாகி நாதனுமானவன்"** என்றும் குறிப்பிடுகின்றனர். அவன் ஒருவனாகவும் இருப்பான், பலராகவும் இருப்பான் என்பது இதன் பொருளாகும். கடவுள் இந்த உலகம் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் மூல காரணமாக இருப்பவர். **"அவனன்றி ஓர் அணுவும் அசையாது"** என்பது பழமொழி. கடவுளின் இச்சைப்படியே அனைத்தும் நடக்கின்றன.

கடவுள் எமது தலைவனாகவும், உறவாகவும் இருந்து எமக்கெல்லாம் அருள்பாலிக்கின்றார். இதனை அப்பர் தனது தேவாரத்தில், **"அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ "** என்று குறிப்பிடுகின்றார்.

**"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"**

இறைவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் என்பதையும் அவரது தனித்துவத்தையும் இவ்வாறு திருமூலர் விளக்கியுள்ளார்.

**"எங்கும் எவையும் எரியுறுநீர் போல் ஏகம்**
**தங்குமவன் தானே தனி"**

கடவுள் எங்கும் கலந்துள்ள போதும், அவரின் தனித்துவத் தன்மையினை, திருவருட்பயன் இவ்வாறு குறிப்பிடுகின்றது. வெந்நீரில் சூடு சீராகப் பரவியிருப்பதைப் போல கடவுள் எங்கும் மறைந்தும் வியாபித்தும் உள்ளான். கடவுள் **அருவம், உருவம், அருவுருவம்** என **மூவகைத் திருமேனி**களை எடுத்து ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கின்றான்.

கடவுள் உயிர்கள் மேல் கொண்ட பரிவு காரணமாக படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் **ஐந்தொழில்**களைப் புரிகின்றான். இவற்றை மேற்கொள்ள பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் மூர்த்தங்களையும் எடுக்கின்றான். கடவுள் **எண்குணங்களை**க் கொண்டவன்.



இலவச விநியோகத்திற்காக

முற்றுமுணர்தல், தூய உடம்பினராதல், தன்வயத்தனாதல், இயற்கை உணர்வினராதல், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை ஆகியவையே அவையாகும்.

ஒரு பானையை ஆக்குவதற்கு ஒருவன் தேவை. அது போலவே உலகத்தைப் படைப்பதற்கு ஒருவன் தேவை. அவனே கடவுள் என, சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. பகலில் நட்சத்திரங்களைக் காணமுடிவதில்லை. அதனால், அவை இல்லையென்று சொல்லிவிட முடியுமா? கடவுளைத் தற்போது காணமுடியாத காரணத்தால், அவர் இல்லையென்று கூறக்கூடாது. நமது அஞ்ஞானத்தால் நாம் கடவுளைக் காணாது இருக்கின்றோம். அஞ்ஞானமாகிய மாயை நீங்கினால், நாம் கடவுளைக் காண இயலும்.

கடவுள் மீது எவரொருவர் பக்தி கொள்கின்றாரோ, அவருக்கு வேடம் தாங்கி வந்து அருள் பாலிப்பார். எடுத்துக்காட்டாக, சுந்தரமூர்த்தி நாயனாரின் திருமணத்தின்போது கிழப் பிராமணராக வந்து தடுத்தாட்கொண்டார். திருஞானசம்பந்தரின் தந்தையார் நீராடுவதற்கு நீரில் மூழ்கியதும் தந்தையைக் காணாது மகன் அழுதபோது, உமையம்மையுடன் இடபாரூடராகக் காட்சி கொடுத்து ஞானப்பால் ஊட்டினார். சுந்தரருக்கு சித்தவடம் என்னும் மடத்தில் வந்து, தீட்சை கொடுத்தார். செம்மனச்செல்வியின் பங்குக்குரிய வைகைநதியின் அணையைக் கட்டுவதற்காகக் கூலியாளாக வந்து, மன்னனிடம் அடிபட்டார். பன்றிக்குட்டிகளுக்கு, தாய்ப்பன்றியாக வந்து பால் கொடுத்தார். இவ்வாறாக, கடவுள் தமது பக்தர்களுக்கு இன்னல்வரும்போது அருள்பாலிப்பார். எனவே, நாமும் கடவுள் உண்டு என்பதை நம்பி, அவர் மீது பக்தி கொண்டு வழிபடுவோம்; அவர் வழி உண்மையுடையவராக வாழ்வோம்.

**''ஒரு நாமம் ஓருருவ மொன்றுமில்லார்க்கு ஆயிரம்**
**திரு நாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டோமோ''**

**01.பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கடவுளுக்குரிய இருவகை நிலைகளையும் குறிப்பிடுக.
2. கடவுள் ஒருவரே உண்மை என்பதை விளக்குவதற்கு, நீங்கள் முன்வைக்கும் எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடுக.

**செயற்பாடு**

1. கடவுள் ஒருவன் உண்மை என்பதை விளக்கும் நூலாதாரங்களைத் தேடித் தொகுத்து, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
2. சிவனின் மூவகைத் திருமேனிகள், ஐந்தொழில்கள், எண்குணங்கள் என்பவற்றை அட்டவணைப்படுத்தி, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

**பாடச்சுருக்கம்**

- கடவுள் எல்லாம் வல்லவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; பிறப்பு இறப்பு அற்றவர்; ஆதியும் அந்தமும் இல்லாதவர்; துன்பங்களுக்கு உள்ளாகாதவர் ஆவார்.
- கடவுளுக்குச் சொரூபநிலை, தடத்தநிலை என இரு நிலைகளுண்டு.
- கடவுளின் இயல்புகள் பலவற்றையும் வேதம், ஆகமம், திருமுறைகள், சைவசித்தாந்த நூல்கள் முதலானவை எடுத்தியம்புகின்றன.
- எமக்கு இன்னல் வரும்போது, கடவுள் வேண்டிய வடிவில் வந்து அருள் புரிவார்.


இலவச விநியோகத்திற்காக